செய்தி வெளியீடு எண்:992 நாள்:30.10.2021

## உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி உதவி தொடர்பான செய்தி வெளியீடு

நமது நாட்டில் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களில் மிகவும் குறைவான அளவே முதலீடு என்ற போதிலும், 74 சதவிகித மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்து வருகிறது. எனினும், இந்நிறுவனங்கள் பெரும்பாலும் முறைப்படுத்தப்படாத நிலையிலேயே உள்ளன. எனவே, இத்தகைய உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்கள் எதிர் கொள்ளும் சவால்களை திறம்பட கையாளவும், நன்கு செயல்படும் குழுக்கள், கூட்டுறவு அமைப்புகள், புதிதாக உணவுபதப்படுத்தும் நிறுவனங்களை அமைக்கவும் ஏற்கெனவே இயங்கிவரும் நிறுவனங்களை மேம்படுத்தவும் **"ஆத்மநிர்பார் பாரத் அபியான்"** திட்டத்தின் ஒரு பகுதியாக **"பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்துவதற்கான திட்டம் (Pradhan Mantri Formalization of Micro Food processing Enterprises (PMFME)"** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திட்டத்தின் நோக்கங்கள்**

தனிப்பட்ட குறு நிறுவனங்களின் போட்டித்திறனை அதிகரித்து, அதன் மூலம் முறைப்படுத்துதலை ஊக்குவிக்கவும், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், உற்பத்தியாளர் கூட்டுறவு அமைப்புகளின் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி விநியோகம் செய்யும் இணைப்பினை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

தனிநபர் மற்றும் குழு சார்ந்த குறு நிறுவனங்களுக்கு நிதி உதவி, வர்த்தக முத்திரை மற்றும் சந்தைப்படுத்துதலுக்கு உதவி, நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கான ஆதரவு, திட்ட மேலாண்மை அமைப்புகளை வலுப்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

**பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மானியம்:**

- குறு நிறுவனங்கள் தொடங்குவதற்கு நிதி உதவியாக, தனிநபருக்கு, உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு, சுய உதவி குழுக்களுக்கு,

கூட்டுறவு அமைப்புகளுக்கு திட்டமதிப்பில் 35% மானியம் அதிக பட்சமாக ரூ.10 இலட்சத்துடன் கடன் உதவி

- சிறு கருவிகள் வாங்க சுய உதவி குழுக்களுக்கு அடிப்படை மூலதனத்திற்காக குழுவில் ஒரு நபருக்கு ரூ.40,000/– நிதி உதவி,
- பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கு திட்ட மதிப்பில் 35% மானியத்துடன் கடன் உதவி,
- வர்த்தக முத்திரை மற்றும் சந்தைப்படுத்துதலுக்காக 50% மானியத்துடன் கடன் உதவி

## ஒரு மாவட்டம் ஒரு விளைபொருள் எனும் அணுகுமுறை

இத்திட்டமானது ஒரு மாவட்டம் ஒரு விளைபொருள் என்ற அணுகுமுறையில் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகளவில் உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருட்களை அடிப்படையாகக் கொண்டு, அதனை மதிப்புக்கூட்டி, உணவுபதப்படுத்தும் குறுதொழில்களை மேம்படுத்தும் விதமாக தமிழ்நாட்டில் 37 மாவட்டங்களுக்கும் தனித்தனியாக விளைபொருட்களை கண்டறிந்து, உணவு பதப்படுத்தும் தொழில்துறையின் மத்திய அமைச்சகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மாவட்ட வாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட விளைபொருட்களின் விவரம் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

நடப்பு 2021 – 22 ஆம் ஆண்டில் 2729 தனிநபர் நிறுவனங்களும், 5 ஆண்டு காலத்திற்குள் (2020 – 25) மொத்தம் 12,000 தனிநபர் நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் வகையில் பயனாளிகளை கண்டறிந்து திட்டத்தினை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள்**

- தமிழ்நாட்டில், இத்திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்திட மாநில அரசு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையினை மாநில முகமை நிறுவனமாக நியமித்துள்ளது. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையின் கீழ் இதற்கென தனிக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும், சம்பந்தப்பட்ட வங்கிகளுடன் தொடர்பு கொண்டு, விரைவாக கடன் வசதி

பெற்று தந்து, ஒன்றிய அரசின் இணைய தளத்தில் இத்திட்ட விபரத்தினை பதிவேற்றம் செய்திடவும், ஒன்றிய அரசின் உணவுப் பதப்படுத்துதல் தொழில் அமைச்சகத்தின் ஒப்புதலை விரைவாக பெற்றுத்தரவும், இத்திட்டப் பயனாளிகளுக்கு போதிய தொழில்நுட்பப் பயிற்சி வழங்கவும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருங்கிணைப்பு அலுவலரை (District Resource Person) அரசு நியமித்துள்ளது.

- மாவட்ட அளவில் இத்திட்டம் குறித்த விரிவான தகவலுக்கு வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) அவர்களை அணுகி தெரிந்து கொள்ளலாம்.
- இத்திட்டம் குறித்த விரிவான தகவல்களை தெரிந்து கொள்வதற்கு மத்திய அமைச்சக உணவு பதப்படுத்தும் தொழில்துறையின் இணையதளமான https://pmfme.mofpi.gov.in என்ற இணையதள முகவரியின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

எனவே, உணவுப்பதப்படுத்தும் குறு தொழில் துவங்க விரும்பும் தனியார் நிறுவனங்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் உங்கள் பகுதிக்கான விளைபொருளில் குறு தொழில்களை தேர்வு செய்து, இத்திட்டத்தின் பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வேளாண்மை உற்பத்தி ஆணையர் (ம) அரசு செயலாளர்**

**இணைப்பு**

**மாவட்டவாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட விளைபொருட்கள் விவரம்**

| வ.எண் | மாவட்டம் | விளைபொருட்கள் |
|---|---|---|
| 1. | அரியலூர் | முந்திரி சார்ந்த பொருட்கள் |
| 2. | செங்கல்பட்டு | மீன் வளப்பொருட்கள் |
| 3. | கோயம்புத்தூர் | தென்னை தொடர்பான பொருட்கள் |
| 4. | கடலூர் | முந்திரி சார்ந்த பொருட்கள் |
| 5. | தர்மபுரி | சிறுதானிய பொருட்கள்( மக்காச் சோளம் தவிர) |
| 6. | திண்டுக்கல் | கால்நடை தீவனம் |
| 7. | ஈரோடு | மஞ்சள் சார்ந்த பொருட்கள் |
| 8. | கள்ளக்குறிச்சி | சமையல் எண்ணெய் (நிலக்கடலை) |
| 9. | காஞ்சிபுரம் | சமையல் எண்ணெய் (நிலக்கடலை) |
| 10. | கன்னியாகுமரி | மீன் வளப்பொருட்கள் |
| 11. | கரூர் | முருங்கை சார்ந்த பொருட்கள் |
| 12. | கிருஷ்ணகிரி | மாம்பழம் சார்ந்த பொருட்கள் |
| 13. | மதுரை | பருப்பு சார்ந்த பொருட்கள் |
| 14. | நாகப்பட்டினம் | மீன் வளப்பொருட்கள் |
| 15. | நாமக்கல் | கோழி தீவனம் மற்றும் அது சார்ந்த பொருட்கள் |
| 16. | பெரம்பலூர் | கால்நடை தீவனம் |
| 17. | புதுக்கோட்டை | முந்திரி சார்ந்த பொருட்கள் |
| 18. | இராமநாதபுரம் | மீன் வளப்பொருட்கள் |
| 19. | இராணிப்பேட்டை | சமையல் எண்ணெய் (நிலக்கடலை) |
| 20. | சேலம் | மரவள்ளிக்கிழங்கு பொருட்கள் |
| 21. | சிவகங்கை | தென்னை தொடர்பான பொருட்கள் |
| 22. | தென்காசி | ஊறுகாய் |
| 23. | தஞ்சாவூர் | தென்னை தொடர்பான பொருட்கள் |
| 24. | நீலகிரி | காய்கறிகள் சார்ந்த பொருட்கள் |
| 25. | தேனி | வாழை சார்ந்த பொருட்கள் |
| 26. | திருவள்ளூர் | பருப்பு சார்ந்த பொருட்கள் |
| 27. | தூத்துக்குடி | பனை பொருட்கள் |
| 28. | திருநெல்வேலி | அப்பள வகை சார்ந்த பொருட்கள் |
| 29. | திருப்பத்தூர் | பருப்பு சார்ந்த பொருட்கள் |
| 30. | திருப்பூர் | கோழி தீவனம் மற்றும் அது சார்ந்த பொருட்கள் |
| 31. | திருவண்ணாமலை | சமையல் எண்ணெய் (நிலக்கடலை) |
| 32. | திருவாரூர் | பருப்பு சார்ந்த பொருட்கள் |
| 33. | திருச்சி | வாழை சார்ந்த பொருட்கள் |
| 34. | வேலூர் | பால் பொருட்கள் |
| 35. | விழுப்புரம் | சமையல் எண்ணெய் (நிலக்கடலை) |
| 36. | விருதுநகர் | சிறுதானிய பொருட்கள்( மக்காச் சோளம் தவிர) |
| 37. | சென்னை | அடுமனை பொருட்கள் |

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9